புதுச்சேரி அரசு

போக்குவரத்துத் துறை

எண்:41/TD/TC/PA/2017 புதுச்சேரி தேதி: 22.03.2017

## செய்திக் குறிப்பு

## போக்குவரத்துத் துறையில் அனைத்து வாகனங்களுக்கும் சாலை வரி செலுத்துவோருக்காக சிறப்பு முகாம்

அனைத்து வாகனங்களுக்கும் சாலை வரி செலுத்துவது அவசியம். சாலை வரி செலுத்தாத வாகனங்கள் பிடிபட்டால், அவற்றிற்குரிய சாலை வரிகளுடன் அபராதமும் சேர்த்து வசூலிக்கப்படும். எதிர்வரும் 2017-18 நிதியாண்டுக்கான சாலை வரிகளை அந்த நிதி ஆண்டு தொடங்குவதற்கு 7 நாட்கள் முன்பிருந்தே செலுத்த முடியும். உரிமையாளர்களின் வசதிக்காக வரும் 24.03.2017 முதல் 31.03.2017 வரை சாலை வரி வசூலிப்பதற்காக போக்குவரத்துத் துறையில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வரும் 24.03.2017 முதல் 31.03.2017 வரை உள்ள அனைத்து அலுவலக நாட்களிலும் சாலை வரி செலுத்துவோரின் வசதிக்காக 100 அடி சாலையில் உள்ள புதுச்சேரி வட்டார போக்குவரத்து அலுவலகம் மற்றும் சாரத்தில் உள்ள உழவர்கரை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஆகிய இரண்டு இடங்களிலும் சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சாலை வரி செலுத்த வேண்டியோர் அனைவரும் தமது வாகனங்களுக்கான சாலை வரிகளை உடனடியாக காலம் தாழ்த்தாமல் செலுத்தி அபராதத்துடன் வரி செலுத்துவதை தவிர்க்கலாம்.

தமது வாகனங்களுக்கு இதுவரை வரி செலுத்தத் தவறியவர்கள் இந்த அறிவிப்பினை கருத்தில் கொண்டு இதுவரை செலுத்தாமல் உள்ள சாலை வரிகளை செலுத்தி போக்குவரத்துத் துறையின் மேல் நடவடிக்கையினை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

GOVT OF PONDICHERRY ★ TRANSPORT DEPARTMENT ★

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்